திருவண்ணாமலை கோட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் பருவமழை இல்லாத காரணத்தினால் குடிதண்ணீர் பஞ்சம் உள்ளது குறித்து

[திரு. மு. அம்பிகாபதி]   [1977 ஆகஸ்டு 8

நேற்றைய தினம்கூட சென்று பார்த்தேன். அந்த ரிப்பேராக உள்ள குழாய்கள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகிறார்கள். திருவண்ணாமலையில் இருக்கிற எ. இ. சொல்கிறார்கள். வேலூரில் இருக்கிற ஈ. இ. ஆகியோர் சாமான்களை—ஸ்பேர் பார்ட்ஸ்களை—வாங்கித் தரவில்லை என்று அவைகளை எல்லாம் உடனடியாக ரிப்பேர் செய்து பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் இந்த அரசு செய்துதர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இன்றே எழுதிக் கொடுத்தால் இன்றே உத்தரவு தரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில், நீண்ட நாட்களுக்கு முன் வாங்கப்பெற்று, வீரியமிழந்த நிலையில் உள்ள பூச்சி மருந்துகளை விநியோகிக்காது தடுப்பது குறித்து.

* **திரு. மு. அம்பிகாபதி:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

“தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில் நீண்ட நாளைக்கு முன்னர் தி.மு.க. அரசு காலத்தில் டெண்டர் கொடுத்து வாங்கப்பட்ட பூச்சி மருந்துகள் இருப்பு உள்ளதாகத் தெரிகிறது. அவை, வீரியமிழந்துள்ள நிலையை அரசு உணர்ந்து அவற்றை விநியோகிப்பதைத் தடுக்க முன்வந்து விவசாயிகள் காக்கப்படவும் உற்பத்தி பெருகவும் நடவடிக்கை எடுப்பது குறித்து”.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தஞ்சாவூரில் சேமித்து வைக்கப்பட்ட 29 இரசாயனப் பூச்சி மருந்துகளில் 9 பூச்சி மருந்துகள் உரிய காலத்திற்கு அதிகமாகவே இருப்பில் இருந்து வந்துள்ளன. தஞ்சாவூர், விவசாயத்துறை

ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

திட்ட இயக்குநர், இவைகள் அனைத்தையும், ஆடுதுறையிலுள்ள பூச்சிக் கொல்லி மருந்துப் பரிசோதனை ஆய்வுக்கூடத்தில், இந்த ஆண்டு, பிப்ரவரி-மார்ச் மாதங்களில் பரிசோதனை செய்தபோது அவை இயல்பு குறையாதவை, விரியம் உள்ளவைகள் என்றும், குடியானவர்களுக்கு வழங்கப்படத்தக்கவை என்றும் கண்டறிந்தார். பூச்சிக் கொல்லி மருந்துப் பரிசோதனை ஆய்வுக் கூடங்களில் இரசாயன மருந்துப் பொருள்களை மீண்டும் பரிசோதனை செய்து அவற்றின்மீது மறு செல்—(செயல்) திறன் சான்றினைக் குறிக்கும் சீட்டு ஒன்றை ஒட்டும்படியும் வீரியம் குறையாத இயல்பான இரசாயனப் பொருள்களை மட்டுமே விற்க வேண்டுமென்றும், எல்லா தல அதிகாரிகளுக்கும் வேளாண்மைத் துறை உத்திரவு பிறப்பித்துள்ளது. எனினும் எங்காகிலும் குறை ஏதும் ஏற்பட்டால், மதிப்பிற்குரிய உறுப்பினர் அதனை குறிப்பாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்த இரசாயன மருந்துப் பொருட்களை மீண்டும் பரிசோதனை செய்து வீரியமுள்ளவைதானா என மீண்டும் ஆய்வு செய்து தக்க மருந்துப் பொருள்களை மட்டுமே விற்பனை செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்த மருந்துகள், நீண்ட நாட்களுக்கு முன்னதாக, குறிப்பாக, தி. மு. க. அரசு இருந்த காலத்தில் வாங்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. பூச்சி மருந்து அளவுக்கு அதிகமாக டெண்டரில் வாங்கப் பட்டனவா? யார் அந்த டெண்டரை எடுத்தார்கள்? இப்படிப் பட்ட நிலைமைகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஓவர் ஸ்டாக் செய்யப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த பூச்சி மருந்துகள் பயிர்களின்மீது அடிக்கப்பட்டால், பூச்சிகள் சாகாமல், அவை அந்த மருந்துப் பொருள்களையே குடித்து விடுவதாகவும், அந்த மருந்தையே உட்கொண்டு, கொழுத்து, பயிர்களைச் சாப்பிடு வதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக, யாராவது தற்கொலை செய்துகொள்ளலாம் என்று அதனைச் சாப்பிட்டால், சாவதில்லை என்றும் கூறப்படுகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலையில்

728 தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகளில் நீண்ட நாட்களுக்கு முன் வாங்கப்பெற்று, வீரியமிழந்த நிலையில் உள்ள பூச்சி மருந்துகளை விநியோகிக்காது தடுப்பது குறித்து

[திரு. பு. அம்பிகாபதி] [1977 ஆகஸ்ட் 8

தமிழகத்தில் பல இடங்களில் பாதித்துள்ள இந்த விஷயத்தைப் பற்றி வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். இது குறித்து கவனம் செலுத்தி, வீரியம் உள்ளதா, இழந்திருக்கிறதா என்பதை அறிந்து, அறிக்கை வைத்துள்ளமைக்கு நன்றி. இது குறித்து மேலும், இது எப்போது வாங்கப்பட்டது, யாரால் இந்த டெண்டர்கள் கொடுக்கப்பட்டன, எந்தெந்தக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்டன என்பதைப் பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் சேகரித்து, இந்த அவையில் தருவார்கள் என்று நம்பி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனைகள் பரிசீலிக்கப்படும். மேலும் விவரங்கள் வேண்டுமென்றால் அதற்காக, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5. தகவல் கோரல்.

காவிரி நீர்ப்பிரச்சினை குறித்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தின் முக்கியமான பிரச்சினையான தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருந்தேன் அந்த கவன ஈர்ப்பு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுமென்று சபாநாயகர் அறிவித்திருந்தார்கள். ஆறு, ஏழு நாட்களாக தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாத காரணத்தால், பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டு, விவசாயிகள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும், காவிரிப் பிரச்சினை என்று சொன்னால், மேட்டூரிலேதான் தண்ணீர் வந்து இருக்கிறதே தவிர, ஆறுகளிலும், கால்வாய்களிலும் தண்ணீர் இல்லை என்ற காரணத்தால் கொந்தளிப்பு நிலை இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் வறுமையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினையைக் குறித்து விவாதிக்க, எனது தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.